திக்வெல்ல பிரதேச சபை - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திக்வெல்ல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவு சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, திக்வெல்ல பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள்,

பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	34 நிர்மாண வேலைக்களுக்குரிய செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 7.09 மில்லியன் தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	சரியான பெறுமதியில் நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீது கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	ரூபா 2.90 மில்லியன் செலவிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்த 03 நிர்மாண வேலைக்குரிய செலவுகளை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செலவுகள் மூலதனப்படுத்தப்பட வேண்டும்.
(இ)	சபைக்காக 02 டிரக்டர் டேலர்கள் உற்பத்தி செய்வதற்காக 2025 ஜனவரி 28 திகதி தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருந்த போதிலும், அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1.40 மில்லியனிற்கான கடன்கொடுத்தோர் மீதியொன்று நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருந்தது.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்தல் மேற்கொள்ளல் வேண்டும்.

(ஈ)	நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருக்காத மற்றும் கூட்டுப்பெறுமதி ரூபா 3.36 மில்லியன் தெகைக்கான 09 சொத்து விடயங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.	கணக்குகள் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	பௌதீக ரீதியாக காணப்படுகின்ற, சபைக்குச் சொந்தமான அனைத்துக் காணிகள், காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், பௌதீக ரீதியாக மெய்மையாய முடியாத விடயங்கள் காணிகள் மற்றும் கட்டிடங்களில் இருந்து அகற்றப்பட்டு வேறொரு விடயம் ஒன்றாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(உ)	வலஸ்கல சந்தையில் அமைந்துள்ள கட்டிடத்தின் பெறுமதி ரூபா 1.12 மில்லியன் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சரியான கட்டிடங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டிற்குரிய சூரிய பெனல் மின்சார வருமானம் ரூபா 0.29 மில்லியன் தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	03 மாதங்களுக்குரிய சூரிய பெனல் வருமானம் உரிய முறையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 05 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதற்குரிய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 160.68 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6.3 கணகக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நாளதுவரை ஆக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 189.57 மில்லியன் தொகைக்கான காணிகள் மற்றும் கட்டிடங்களின் மீதியினை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.	சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.7 இணங்காமை

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1)	07 வீதவரி அதிகாரப் பிரதேசம் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என இனங்காணப்பட்டு வெளியிடப்பட்டு 02 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும், அந்த ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தகவல்கள் அனுப்பப்பட்ட போதிலும் இதுவரை பதில் கிடைத்திருக்கவில்லை.	ஆதனங்களை விரைவாக பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 52.98 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 66.72 மில்லியன் தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	வருமான மூலம்	2024 மதிப்பீட்டு வருமானம் ரூபா	2024 சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா	2024 சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா	2023 மதிப்பீட்டு வருமானம் ரூபா	2023 சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா	2023 சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா	2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா
(i)	வீதவரி மற்றும் வரி	8,658,000	10,705,277	10,768,162	3,987,731	9,050,000	13,187,823	11,809,409	4,050,616
(ii)	வாடகை	9,234,150	11,128,210	11,905,850	276,365	8,750,000	9,806,191	10,211,861	1,054,005
(iii)	அனுமதிப் பத்திரக் கட்டணம்	1,872,500	2,089,955	2,033,030	56,925	3,022,000	1,629,910	1,629,910	-
(iv)	ஏனைய வருமானங்கள்	10,010,700	25,222,211	20,214,501	5,007,710	24,950,000	21,595,198	21,759,358	-
		29,775,350	49,145,653	44,921,543	9,328,731	45,772,000	46,219,122	45,410,538	5,104,621

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) வீதவரி		
மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 2921 வீதவரி அலகுகள் தொடர்பாக ரூபா 3.99 மில்லியனிற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன், அவற்றில் 565 வீதவரி அலகுகள் தொடர்பாக ரூபா 958,814 தொகை மீதியொன்று 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. அதேபோல் நிலுவை மீதியில் அடங்கியுள்ள ரூபா 5,000 இற்கு மிகையான நிலுவை மீதிகளுடைய அலகுகளின் எண்ணிக்கை 143 ஆக காணப்பட்டது.	2025 ஆண்டின் முதலாம் காலாண்டில் 16.07 சதவீதம் அறவிடப்பட்டுள்ளது என.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு முறையான வேலைத் திட்டமொன்று தயாரித்து செயற்படுத்த செய்ய வேண்டும்.

(ஆ) வாடகை

(i)	மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 276,365 இற்கான நிலுவை வாடகை மீதியொன்று காணப்பட்டதுடன், சபைக்குச் சொந்தமான 117 கடைகளில் 20 கடைகளுக்கான ரூபா 182,615 தொகை நிலுவை வருமானம் ஒன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. அவற்றில் ஒரு கடையறை தொடர்பாக ரூபா 84,960 தொகைக்கான மீதியொன்று 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.	ரூபா 276,365 இற்கான நிலுவை மீதியில் 2025 மார்ச் 31 திகதி அளவில், ரூபா 123,005 இற்கான தொகையொன்று அறவிடப்பட்டுள்ளதுடன் மற்றும் மாத்தறை மாவட்ட நீதிமன்ற பதிவாளரிடம் அறிவுரை வேண்டி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது என.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு முறையான வேலைத் திட்டமொன்று தயாரித்து செயற்படுத்த வேண்டும்.
(ii)	தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 21 திகதிய தபபா/பபாகோ/2010/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 11 இன் ஏற்பாடுகளுக்கு இணங்காமல் சபைக்கு சொந்தமான 03 கடைகள் வேறு தரப்பினருக்கு துணை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என.	சுற்றிக்கையின் பிரகாரம் துணை வாடகைக்கு கொடுக்க முடியாமையால் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ) ஏனைய வருமானங்கள்

மாகாண சபை, பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1.03 மில்லியன் தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 29.50 மில்லியன் தொகையும் பெற வேண்டிக் காணப்பட்டது.	இந்த மீதியில் கருதுகோள் சார் பெறுமதிகளும் அடங்கியுள்ளது என.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு முறையான முறையான வேலைத் திட்டமொன்று தயாரித்து செயற்படுத்த வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபைச் சட்டத்தின் 126 பிரிவின் கீழ் தனிப்பட்ட மற்றும்	உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு கடிதம்	நிச்சயிக்கப்பட்ட கால சட்டகத்தினுள்

	ஆயுர்வேத உடல் உருவல் நிலையங்கள் நடாத்துதல், சீதகல்ல நீச்சல் தடாகம் நடாத்துதல் மற்றும் முச்சக்கர வண்டி தரிப்பிடங்களை பதிவு செய்தல் ஆகிய கருமங்களுக்காக துனை விதிகள் விதிக்கப்பட்டு வருமானம் அறவீடு செய்வதற்கு முடியுமாக இருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.	அனுப்பட்டுள்ளது என.	துணை விதிகள் ஆக்கப்பட்டு வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற உக்கக்கூடிய குப்பைகளை மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட தனியார் காணியொன்றில் குவிக்கப்படுவதுடன், உக்காத குப்பைகளை சபை வளாகத்தில் வாகன செயற்கலத்தில் குவிக்கப்பட்டு இருந்ததுடன், குப்பை முகாமைத்துவதற்திற்காக முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	பொருத்தமான காணியொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரை பெறப்பட்டுள்ளதெனவும், பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பெற்ற பின்னர் காணியை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	விரைவாக காணியை கொள்வனவு செய்து நிச்சயிக்கப்பட்ட கால சட்டகத்தினுள் முறைசார் குப்பை முகாமைத்துவ முறைமையொன்று அறிமுகப்படுத்த வேண்டும்.
(இ)	2015 மே 20 திகதி பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 11/2015 இன் படி பொதுமக்கள் முறைப்பாடு தொடர்பாக தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2024 ஆண்டின் சபைக்கு கிடைத்திருந்த 57 பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கள பரிசோதனை மேற்கொள்வதற்கு போதியளவு வசதிகள் காணப்படவில்லை என.	பொதுமக்கள் முறைப்பாடுகளுக்கு விரைவாக பதிலளிக்க வேண்டும்.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டிற்காக பாதீட்டின் மூலம் ரூபா 58.61 மில்லியன் தொகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 26 நிர்மாண வேலைகள் செயற்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	காலம் போதியளவாக காணப்படாமை மற்றும் ஏனைய செயற்திட்டங்களுக்கு பணம் ஈடுபடுத்தப்படுவதனால் செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு முடியாமல் போனது என.	செய்முறை சாத்தியமான செயற்படுத்தக்கூடிய செயற்திட்டங்களுக்கு மாத்திரம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட வேண்டும்.

3.3 செயற்பாடடுத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
கலகமகேஹேன மடவலகாவ எனப்படும் தமியன்கொடஹேன எனும் காணி துணைப் பகிர்வு செய்து விற்பனை செய்யும் போது, 1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 154(1) பிரிவின் படி துண்டுகளின் விற்பனைப் பெறுமதியின் மீது அறவிடப்பட வேண்டிய 01 சதவீத கட்டணம் சபையினால் அறவிடப்பட்டிருக்காததுடன், அபிவிருத்தி அனுமதிப்பத்தரத்தின் 03 நிபந்தனைகளை பூர்த்தி செய்திருக்கவில்லை.	காணிக்குரிய நிபந்தனைகள் மற்றும் ஏனைய நிபந்தனைகள் பூர்த்தி செய்து சபைக்கு அறிவிக்கும் படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளதெனவும், விற்பனை விலையில் 01 சதவீதம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்.	அனைத்து நிபந்தனைகளையும் இணங்கியவாறு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், சபைக்கு அறவிடப்பட வேண்டிய தொகையை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபைக்குச் சொந்தமாக காணப்படுகின்ற 01 ஏக்கர் 02 ரூட் 79.09 பர்சஸ் அளவான காணி உறுதிகள் தயாரிக்கப்பட்டு சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர் காலத்தில் உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என.	விரைவாக காணி உறுதிகள் தயாரிக்கப்பட்டு சபைக்கு உரித்தாக்க வேண்டும்.

3.5 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபைக்கு சொந்தமான வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4.59 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 10 சந்தர்ப்பங்களில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த திருத்த வேலைகள் மேற்கொள்வதற்காக வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யும் போது 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 8.1 இன் பிரகாரம் மோட்டர் இயந்திர அறிவுரையாளர் / இயந்திர பொறியியலாளரின் பரிந்துரையை பெற்றுக்கொண்ட பின் பெறுகைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு பரிந்துரை பெற்றுக்கொள்ளப்படாமல், நேரடியாக திருத்த வேலை	தற்போது சரி செய்யப்பட்டுள்ளது என.	பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டியதுடன், அவ்வாறு செயற்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அலுவல்கள்
மேற்கொள்ளப்பட்டிருந்தது.

3.6 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஆளணித் திட்டத்தில் காணப்பட்ட 14 பதவிகள் முறைப்படுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	புதவிகளை அங்கீகரிப்பதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என.	பதவியணி தேவைப்பாடு தொடர்பாக மீளாய்வு செய்து அதன்படி பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	சபையில் கடமையாற்றிய இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, சேவையை விட்டுச் சென்றுள்ள, ஓய்வுபெற்ற, இறந்த ஊழியர்கள் 09 பேரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 0.65 மில்லியனிக்கான கடன்மீதி 02 வருடங்களுக்கும் 19 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்டது.	கடன்மீதிகளை எதிர்காலத்தில் தீர்த்துக்கொள்தவற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிச்சயிக்கப்பட்ட கால சட்டகத்தினுள் நிலுவை கடன்மீதி விரைவாக அறவிடப்பட வேண்டும்.
(இ)	சபையில் 08 வேலை வெளிக்கள தொழிலாளர்களுக்கு மற்றும் வாகன உதவியாளர் பதவிக்கு உரிய பணிகள் இன்றி வேறு கருமங்கள் சாட்டப்பட்டு 2024 ஜனவரி முதல் செப்தம்பர் வரையான காலப் பகுதிக்காக சம்பளமாக ரூபா 3.72 மில்லியன் தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.	பதவிகளின் வெற்றிடங்களின் மீது இயலுமை மற்றும் அனுபவத்தின் படி ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என.	பதவியணி ஆட்சேர்ப்பின் போது உண்மையான தேவைப்பாட்டை உறுதிப்படுத்திய பின்னர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், பதவிகளுக்குரிய கடமை அலுவல்களில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.
(ஈ)	சபையின் கடமையாற்றும் அலுவலக உதவியாளர் ஒருவருக்கு 2023 மார்ச் 20 திகதி முதல் திக்வெல்ல வாராந்த சந்தையில் வரி சேகரிக்கும் கடமை சாட்டப்பட்டிருந்ததுடன், 2004 ஜனவரி முதல் செப்தம்பர் வரையான காலப் பகுதிக்காக ரூபா 94,704 தொகை கமிஷன் தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது.	03 வருமான பரிசோதகர்கள் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், தற்போது ஒரு வருமானப் பரிசோதகர் மற்றும் காணப்படுவதனால், அதற்காக நிதிக்குழுவின் அங்கீகாரத்துடன் இவ்வாறு கடமை சாட்டப்பட்டுள்ளது என.	அலுவல உதவியாளர் ஒருவருக்கு இவ்வாறான பணம் தொடர்புள்ள கடமைகள் சாட்டப்படக்கூடாதுடன், பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் தற்காலிகமாக குறிப்பிட்ட கருமத்திற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும்.